மற்றும் வெம்பக்கோட்டை, சேலம் மாவட்டத்திலுள்ள அயோத்தியாபட்டினம், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை ஆகிய வட்டாரங்களில் அமைந்துள்ள 100 இராமங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் வகையில், பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு 127 கோடி ரூபாய் செலவில் 25 ஷேர் ஆட்டோக்கள் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

4. மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கு சிறப்புப் பயிற்சி அளித்தல்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர், பரமக்குடி, போகலூர் வட்டாரங்களில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலும் திறமைமிக்க 500 மாணவர்களுக்கு, மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கு ஏதுவாக, 25 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்புப் பயிற்சி அளித்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச்

(எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2014-2015, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014-2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது: